சார்பு நீதிமன்றம், அவிநாசி

**OS No. 434 /2016**

**நாள் : 25.09.2023**

**DW1 : கருப்புசாமி**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :**

1) மேட்டுப்பாளையத்தில் , வேல்ஸ் புரம் பகுதியில் ஆரம்பப்பள்ளியின் மேற்கு புறம்தான் தோட்டம் அமைந்துள்ளது. முத்துசாமியின் பெரிய மகள் பெயர் மல்லிகா. 2-வது மகள் பெயர் தவமணி. 3-வது மகள் பெயர் சாவித்திரி ஆகும். இவர்கள் 3 பேரும் முத்துசாமியின் முதல் மனைவியின் மகள்கள் என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் பழனியம்மாள் என்றால் சரிதான். 2-வது மனைவி பெயர் கருப்பாத்தாள் என்றால், கருப்பாத்தாளை, முத்துசாமி திருமணம் செய்யவில்லை. கருப்பாத்தாளுக்கும், முத்துசாமிக்கும் இடையே 2 மக்கள் பிறந்தனர். மகன் பெயர் வெள்ளியங்கிரி. மகள் பெயர் கருப்பாத்தாள். நான் பிறந்தது கந்தம்பாளையம் ஆகும். எங்கள் ஊரில் தன்னாசி என்பவர் இருந்தார் என்றால் சரிதான். அவரை, என் தந்தை, என் சித்தப்பா சிந்தா கருப்பன் மற்றும் நான் ஆகியோர் கொலை செய்து விட்டதாக வழக்கு போடப்பட்டு வழக்கு நடந்தது என்றால் சரிதான். அது பொய் வழக்கு ஆகும்.

2) மேற்படி வழக்கில் எனக்கு ஒரு ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது என்றால் தவறு. அந்த வழக்கிற்கு பிறகு நான் கந்தம்பாளையம் ஊரைவிட்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல, நான் வெல்ஸ் புரத்திலும் இருப்பேன். தோட்டத்திலும் இருப்பேன். என்னுடைய முகவரி 6/275, கூத்தாமண்டி, இரும்பறை கிராமம் என்றால் சரிதான். தற்போதும் நான் அங்கு இருக்கிறேன் என்றால் சரியல்ல, தோட்டத்தில் இருக்கிறேன். இரும்பறை கிராமத்திற்கு அடிக்கடி போய் வருவேன். என்னுடைய ஆதார் அட்டையில் இரும்பறை முகவரிதான் உள்ளது என்றால் சரிதான். நான் கூத்தாமண்டி இரும்பறையில்தான் குடியிருந்து வருகிறேன் என்றால் இரண்டு இடத்திலும் குடியிருக்கிறேன். கந்தம்பாளையத்தில் நான் குடியிருந்ததற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பூமி வாங்கி உள்ளேன். அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நாதம்பாளையம் சொசைட்டி உறுப்பினர் கார்டு போட்டுள்ளேன். அந்த உறுப்பினர் எண் எனக்கு தற்போது நினைவில்லை.

3) வரட்சி நிவாரண நிதி வழங்கிய போது நான் மேற்படி சொசைட்டியில் உறுப்பினராக சேர்ந்தேன். நான் கூத்தாமண்டி விலாசத்தைதான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய அண்ணன் முத்துச்சாமி பட்டப்படிப்பு முடித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் 15 வயதிலேயே வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். முத்துச்சாமி கோவை அரசுக்கலைக்கல்லூரியில் பட்டப்படிப்பு படித்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

பட்டப்படிப்பு முடித்தவுடன் விவசாயம் செய்தார் என்றால் சரியல்ல. முத்துச்சாமிக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் அவருக்கு திருமணம் ஆகவில்லை. மல்லிகா எப்போது பிறந்தார் என்று எனக்கு தெரியாது. மல்லிகா கந்தம்பாளையத்தில்தான் பிறந்தார் என்றால் இல்லை. நான் கந்தம்பாளையத்தில் இருந்திருந்தால் என் அண்ணன் டிகிரி முடித்ததும், அவருக்கு மல்லிகா பிறந்ததும் தெரிந்திருக்கும என்றால் சரியல்ல. முத்துச்சாமிக்கு 1970 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது என்றால் அவருக்கு திருமணம் ஆகவில்லை.

4) நான் மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் சான்றிதழில் தவமணி என்ற பெயர் உள்ளது என்றால் சரிதான். அவர் தந்தை பெயர் முத்துச்சாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தவமணி 23.01.1974 ஆம் ஆண்டு பிறந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி, ஆவணத்தில் தவமணி வெல்ஸ் புரத்தில் பிறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்தப்பள்ளியில் தவமணி 1981 முதல் 1982 வரை 2-ம் வகுப்பு படித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வெல்ஸ்புரம், ADWP பள்ளியின் மாற்றுச்சான்றிதழ்தான் என்னிடம் காட்டப்படுகிறது என்றால் அது ஆங்கிலத்தில் இருக்கிறது. நீதிமன்றத்தில் ஆஜராகியிருப்பது முத்துச்சாமி மகள் தவமணி என்றால் சரிதான். பொன்னான் என்கிற முத்தப்பன் என்னுடைய அண்ணன்தான். அவர் இறந்த இடம் வெல்ஸ்புரம் என்று என்னிடம் காட்டப்படும் இறப்பு சான்றிதழில் 30.07.1992 -ல் வெல்ஸ்புரத்தில் இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) 07.06.1983 ஆம் ஆண்டு மேட்டுப்பாளையத்திலுள்ள காரமடை கூட்டுறவு நிலவள வங்கியில் நான் உறுப்பினர் என்றால் எனக்கு நினைவில்லை. அதில் நான், என் அண்ணன் முத்துச்சாமி மற்றும் என் தந்தை ஆகியோர் உறுப்பினர் என்றால் எனக்கு நினைவில்லை. என்னுடைய தந்தையின் உறுப்பினர் எண்.1691 ஏ என்றால் எனக்கு நினைவில்லை. 2051 பி என்பது என் அண்ணன் முத்துச்சாமியின் உறுப்பினர் எண் என்றால் எனக்கு நினைவில்லை. 2052 என்பது என்னுடைய உறுப்பினர் எண் என்றால் எனக்கு நினைவில்லை. நான், என் அண்ணன் மற்றும் என் அண்ணனின் மகன் ஆகியோர் வெல்ஸ்புரத்திலுள்ள சொத்தை மேற்படி கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்து பணம் பெற்றுள்ளோம் என்றால் எனக்கு தெரியாது. அந்த அடமானத்தொகையை என் அண்ணன் இறந்த பிறகு நான் செலுத்தியுள்ளேன் என்றால் எனக்கு நினைவில்லை. என் தந்தைதான் பணத்தை செலுத்தியிருப்பார். கடன் நீக்கப்பட்டதா என்று எனக்கு தெரியவில்லை. கடன் பெற்ற விவரமும் எனக்கு நினைவில்லை. பதிவு

அலுவலகத்திற்கு சென்று என்னுடைய மைனர் மகன் பெயரை கண்டு எழுதி பதிவு செய்து கடன் பெற்றுள்ளோம் என்றால் எனக்கு நினைவில்லை.

6) மேற்படி கடன் பெறும் நிகழ்வுகளை என் அண்ணன் முத்துச்சாமிதான் முன்நின்று செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அனைத்து விவரங்களையும் தெரிந்து கொண்டு நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த முறை என்னை விசாரணை செய்யும்போது, இது சம்மதந்மாக கேள்விகள் கேட்கப்பட்டது என்றால் சரிதான். நான் மேற்படி கடன் பற்றி கூட்டுறவு வங்கியில் விசாரிக்கவில்லை.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd./- K. Suresh Kumar,
Subordinate Judge,
Avinashi.